28 OCT 1909 MADRAS.

TIT-BITS OF ANIMAL LIFE.

A QUARTERLY ADVOCATE OF HUMANITY FOR SCHOOLS AND FAMILIES.

ஜந்து வர்த்தமான ஸாரம்.

பாடசாலைகளுக்கும் வீடுகளுக்கும் உபயோகப்படும்

ஜீவகாருண்ய விளக்க மும்மாதப் பத்திரிகை.

சம்புடம் IX.] **NOVEMBER, 1909-ஆம் நவம்பர்மீ.** [இலக்கம் 4.

யானைகளின் சம்ரக்ஷணை. III.

(தொடர்ச்சி.)

7. யானைகள் வெய்யிலைச் சகிக்கமாட்டா. நிழலில்லாத விடங்களில் அவைகளினிடத்தில் வேலை வாங்குவதாவது, அவைகளைக் கட்டிப்போடுவதாவது கொடூரம். தும்பிக்கையை வாயில் வைத்துக்கொள்வதினாலும், குளிர்ச்சியான வஸ்துக்களை யெடுத்து உடம்பின் மேல் போட்டுக்கொள்வதினாலும், மண்ணைப் பெயர்த்து முதுகின்பேரிலும் தலையின்பேரிலும் போட்டுக்கொள்வதாலும் யானைகள் வெப்பத்தைச் சகிக்க முடியவில்லை யென்பதைக் காண்பிக்கும். இவற்றையெல்லாம் சொந்தக்காரர் ஜாக்கிரதையாய்க் கவனிக்க வேண்டும். மழை பொழியும்போது கொஞ்சம் மறைவான விடமாயிருந்தாலும் போதுமானது; அதனால் யானைகளுக்கு அவ்வளவாகக் கெடுதி நேரிடாது. ஆனால், காற்று மழை அல்லது குளிர்ந்தகாற்று அடிக்கும்போது மறைப்பு ஒன்றுமில்லாமலிருந்தால் ஏதாவது கொஞ்சம் கெடுதி நேரிடும். மரமடர்ந்த இடங்களும், நல்ல வாய்க்கால்களிருக்கு மிடங்களும் யானைகளுக்கு மிகப் பிரியம். அவைகளைக் கட்டும் தரை சாய்வாயிருக்கவேண்டும். அவைகள் நிற்குமிடம் அப்போதைக்கப்போது மாற்றிக்கொண்டிருக்கவேண்டும். கொஞ்ச தூரத்தில் ஒரு குழி தோண்டி அதில் அசுத்தம் எல்லாம் போட்டு மூடிவிடவேண்டும். அழுக்கு சேர்ந்தால் ஈக்கள் மொய்த்து யானைகளைக் கடித்து வருத்தும். யானைகளுக்கு விசாலமான விடங்களில் கொட்டாய்கள் அமைக்க வேண்டும். அவற்றில் கால்வாய்கள் அமைக்கப்பட்டிருக்கவேண்டும். அவற்றின் தரை பூமி மட்டத்திற்குக் கொஞ்சம் உயரமாயும் சாய்வாயு மிருக்கவேண்டும். கீழ்த்தரையில் சிமிட்டி பூசுவது நலம்.

8. நல்ல தேகஸ்திதியிலிருக்கிற யானைக்கு தினம் தேகப்பயிற்சி இருக்கவேண்டும். ஆகையால் வேறு வேலை யொன்றுமில்லாமலிருந்தால் காலை மாலைகளில் நடத்துவது, கட்டைகளை ஓரிடத்திலிருந்து மற்றோரிடத்திற்குக் கொண்டுபோய் வைப்பது முதலிய அப்பியாசங்களை ஒவ்வொரு மணிநேரம் செய்விக்கவேண்டும். பர்மா தேசத்தில் யானைகளுக்கு வேலையில்லாம லிருக்கிறதில்லை. ஒரு யானையை நன்றாய்ப் பாதுகாத்துக்கொண்டிருந்தால் அது தினந்தோறும் ஆறு அல்லது ஏழு மணிநேரம் வேலை செய்யும். வாரத்துக்கு ஒரு நாளாவது அதற்கு விடுமுறை தருவது நலம். வேலை வாங்கும்போது யானைகளின் இயற்கையான குணங்களைக் கவனிக்கவேண்டியது அவசியம். அவைகளின் பொறுமைக்கும் வல்லமைக்கும் அளவு உண்டென்பதை ஞாபகம் வைக்கவேண்டும். வீடுகளில் வளருகிற மற்ற ஜந்துக்களைப்போல் அவைகள் சாதாரணமாய்ச் சிறையில் பிறப்பனவல்ல. அநேக வருஷங்களாய்த் தம்மிஷ்டப்படிச் சுயேச்சையாயிருந்து அவைகள் திடீரென்று பிடிக்கப்பட்டு வேலைக்குப் பழக்கப்படுகின்றன. ஆகையால், அதிக வேலைவாங்கிக் காட்டில் அவைகள் சுயேச்சையா யிருக்கும்போதுண்

டான வழக்கங்களுக்கு நேர் விரோதமான வழக்கங்களைச் செய்யலாகாது. வேலைசெய்யும் நேரம், இடம், அல்லது பிரயாணம் செய்யும் பூமியின் காட்சி, பரப்பு இவைகளை யெல்லாம் யோசிக்கவேண்டும். கோடைக் காலத்தில் யானைகளிடத்தில் வேலை வாங்க வேண்டிய வேளையானது காலைமுதல் ஒன்பதரை மணிவரையிலும், மாலையில் நாலு மணிமுதல் சூரியன் அஸ்தமிக்கிறவரையிலும்தான். மழைக்காலத்தில் மேகம் மூடிக்கொண்டு குளிர்ச்சியா யிருக்கும்போது அவைகளைக் காலையில் அதிகநேரமும் மாலையில் கொஞ்சம் முன்னதாகவும் வேலைசெய்யும்படி விடலாம். மேடு பள்ளமான நிலங்களிலும் மணற்பாங்காயிருக்கும் கடற்கரைகளிலும் பளுவை யிழுக்கும்பொழுதுகளைப்பு தீரும்பொருட்டு அடிக்கடி சாவகாசம் கொடுக்கவேண்டும். அதிகக் கஷ்டவேலை செய்வதும் வெகுநேர முழைப்பதும் அவைகளின் மனதிற்குத் துக்கமுண்டாக்கும்.

9. அதிகவேலை செய்யவேண்டி யிருக்கும்போது, இரண்டு அல்லது மூன்று யானைகளை அந்த வேலையை மாற்றிமாற்றிச் செய்ய விடவேண்டும். மூட்டைகளைச் சுமக்கின்ற யானைகளின்பேரில் அதிகமாய் மூட்டைகளை யேற்றக்கூடாது. வெகுநேரம் பளுவான மூட்டைகளைச் சுமந்துகொண்டு நடந்தால் யானை தளர்ச்சியடையும், அல்லது அதன் காலில் புண் உண்டாகும், அல்லது அதன் தேக சௌக்கியம் குறைந்துவிடும். நுட்பமாய்க் கவனித்து யானைகள் வேலைசெய்யும் திறமையைத் தெரிந்துகொண்டால் கொஞ்சமேனும் பயமின்றி அவைகளோடு நடமாடவும் அவைகளினிடத்தில் அதிகவேலை வாங்கவும் கூடும். யானைகள் வேலைசெய்யுந் தன்மையும், பொறுமையும் மனிதர்களின் குணங்களைப்போலவே மாறுபடுகின்றன. யானைகள் எங்கேயாவது வெட்டவெளியாயிருக்கிற விடங்களில் வேலைசெய்ய வேண்டியதாயிருந்தால் அவைகளின் கழுத்தின்மேலும் தலைமேலும் சும்மாடு கட்டவேண்டும். யானையோட்டும் தொழிலுக்கும் விசேஷ புத்தியும் திறமையும் வேண்டும். யானைப் பாகர் அநேகர் அத்தொழிலைச் சரிவரச் செய்துவருகிறார்கள். நாம் அவர்களைப் பட்சமாய் நடத்தவேண்டும். அவர்களிருக்கிற இடத்தைவிட்டு வேறு இடத்திற்குப் போக வேண்டுமென்கிற எண்ணம் அவர்களுக்குப் பிறக்காமல் நாம் அவர்களை நடத்தவேண்டும். அவர்களுக்குப் போதுமான அன்னவஸ்திரங்களு மளிக்கவேண்டும். அப்படிச் செய்தால்தான் அவர்கள் சந்தோஷமாயிருப்பார்கள். அவர்கள் தங்கள் வசத்திலிருக்கும் பிராணிகளை நன்றாய்ப் பார்த்துக்கொள்வதற்காக அவர்களுக்குச் சம்பளத்தின்மேல் கொஞ்சம் வெகுமதியும் கொடுக்கவேண்டும். தம்முடைய சௌக்கியத்துக்காகத் தங்கள் யானைகளை அசௌக்கியப்படுத்துவோர்கள், யானைகளை அதிகவேலை செய்யும்படி அல்லது அதிகபளுவைச் சுமக்கும்படி செய்வார்கள். யானைகள் களைத்திருப்பதை அல்லது அசௌக்கியமா யிருப்பதை மேலதிகாரிகளுக்குத் தெரிவியாமலிருப்பவர்கள், அவர்களுக்குத் தெரிவியாமல் தாங்களே மருந்துகளைக் கொடுப்பவர்கள், இவை முதலான கெட்ட நடத்தையுள்ள பாகர்களின் குற்றங்களுக்குத் தக்கபடி அவர்களைத் தண்டிக்கவேண்டும், அல்லது அவர்களை வேலையிலிருந்து நீக்கிவிடவேண்டும்.

ஓர் பூனையின் அன்பு.

“தி அநிமல் வொரல்ட்” (The Animal World) என்னும் பத்திரிகையில் மேரி. இ. கென்ட்ரூ (Mary E. Kendrew) என்னும் துரைசானி ஒரு பூனையின் அறிவைப் பற்றிப் பின்வருமாறு எழுதுகிறார்:—

“சில நாளைக்குமுன் எங்களிடத்தில் “டாட்” என்னும் ஒரு அழகிய பூனை இருந்தது. அது குட்டியா யிருக்கும்பொழுதே ஒரு பையன் அதை எங்களுக்குத் தந்தான். அது அந்தப் பையனிடத்தில் இருந்தபோது மற்ற பிள்ளைகள் யாதொரு கெட்ட எண்ணமில்லாமலே விளையாட்டிற்காக அதைப்பிடித்திழுப்பதும், தூக்கிக் கீழே போடுவதும் முதலான தொந்தரவுகள் செய்வதினால் அது பயந்து அடிக்கடி ஓடிப்போய்விடும். அதனால் அந்தப் பையன் அது எங்களிடத்தில் பத்திரமாய் இருக்குமென்று எங்களுக்குக் கொடுத்தான். முதலில் அது அதிகக் கூச்சமுடையதாய் யாரையும் தன்னைத் தொட விடாது. பிறகு வரவர நாங்கள் அதனிடத்

தில் பட்சமாயிருந்ததை யறிந்து அது சாதாரணமாய் எல்லாரிடத்திலும் வர ஆரம்பித்தது. அது மிகவும் அழகிய பூனை. நன்றாயமைந்த சிறு தலையும் மெல்லிய கால்களும் வெண்ணிறமாயும் பட்டைப்போல் மிருதுவாயுமுள்ள மார்பும் உடையதாயிருந்தது. மிருகங்களைப்பற்றி யொன்றும் தெரியாதவர்கள் ஒரு சிறு பூனைக்கும் உணர்ச்சியிருக்கிறதென்றால் நம்பமாட்டார்கள். ஆனால் நான் கீழே சொல்லப்போகிற எங்கள் 'டாட்' பூனையின் கதையைப் படித்தால் அந்த எண்ணம் பிசகென்பதை யறிவார்கள். பூனைகளையும் நாய்களையும் நாம் கவனியாமலிருந்தால் அதற்காக அவைகள் வருத்தப்படுகின்றனவென்பதை நான் நம்புகிறேன்.

இந்த டாட் என்னும் பூனைக்கு என்மேல் அதிகப் பிரியம். நான் உடம்பு சௌக்கியமில்லாமல் படுத்திருக்கும்போதெல்லாம் அது என்னை விட்டுக் கொஞ்சநேரம்கூட விலகாமல் என் காலண்டை படுத்திருக்கும். டாட்டுக்கு இவ்வளவு பரிதாபம் எப்படி வந்தது என்பீர்களோ? சாதாரணமாய் நமக்கு நல்ல குணங்கள் எப்படி யுண்டாகின்றனவோ அப்படித்தான் வந்தது. அதாவது, கடவுள் கெட்டவர்களை நல்லவர்களாக்கவேண்டுமென்று எண்ணினால், அவர்களுக் கேதாவது துன்பம் விளைவிப்பார். அப்பொழுது அவர்கள் பிறரும் இம்மாதிரித் துன்ப மடைந்தால் தங்களைப்போல்தானே கஷ்டப்படுவார்களென்ற எண்ணம் உண்டாகி நல்லவர்க ளாய்விடுவார்கள். இந்த டாட் ஒருநாள் தன்னைப்போலவே அழகான ஒரு குட்டி போட்டது. கொஞ்சநேரம் அதைக்கொஞ்சிக் குலாவியானபிறகு தனக்குப் பசியுண்டாகவே தீனி தேடிக்கொள்ளச் சென்றது. திரும்பி வந்து பார்க்கையில் குட்டி காணப்படவில்லை. பலவிடங்களில் தேடிப் பார்த்தும் அகப்படவில்லை. இதனால் அதிக துக்கமடைந்து எப்பொழுதும் அழுதவண்ணமாயிருந்தது. நான் அதைப் பலவிதங்களினால் மிகவும் சிரமப்பட்டுத் தேற்றினேன். அதுமுதல் எனக்கேதாவது நோய் வந்தால் டாட் மிகவும் பரிதாபப்படும்.

இப்படியிருக்கையில் நாங்கள் ஓர் ஊருக்குப் போய்வர வேண்டியதாயிருந்தது. அத்தருணத்தில் டாட் மறுபடியும் குட்டிபோட்டிருந்ததினால் அதைக் கூட அழைத்துச் செல்ல முடியவில்லை. அதை வீட்டின் வெளிப்புறத்திலிருந்த ஒரு அறையில் விட்டுவிட்டு அயலாரிடத்தில் அதைப் பார்த்துக் கொள்ளும்படிச் சொல்லிவிட்டுப் போனோம். நாங்கள் திரும்பி வந்தபோது டாட்டின் குட்டிகள் பெரிதாகி நன்றாயிருந்தன. ஆனால், அவைகளில் **விக்கு** என்னும் ஒரு குட்டி மாத்திரம் நொண்டிக்கொண்டு நடப்பதும் ஓடினால் விழுவதுமாயிருந்தது. அதன் தாய் அதைத் தவறிக் கீழே போட்டதினால் அப்படி அதன் கால் முடமாயிற்றோ அல்லது யாராவது அதற்குத் தீங்கு செய்தார்களோ ஒன்றும் தெரியவில்லை. அதனால் அதற்கு நோயுண்டாகாதென்று இரண்டு டாக்டர்கள் சொன்னார்கள். **விக்கும்** தனக்கு யாதொரு நோயுமில்லாததுபோலவே மற்ற குட்டிகளுடன் தோட்டத்தில் ஓடிக் குதித்து விளையாடும். ஆனபோதிலும், டாட் மாத்திரம் இதைப்பற்றி அதிகக் கவலைப்பட்டு அதைச் சொஸ்தப்படுத்த தன்னால் கூடியவரையில் முயற்சி செய்தது. டாட்டுக்கு வெளியே உலாவப்போவது மிகவும் இஷ்டம். அப்படிப் போகும்பொழுது தன் முடக்குட்டியை வீட்டிலேயே விட்டுப் போகும். வீட்டிலிருப்பவர் எல்லாரும் அதன்மேல் பரிதாபங்கொண்டு அன்பாயிருப்பார்கள். வேலைக்காரர்கள்கூட அதனிடத்தில் அன்புகொண்டு அது சாப்பிடும்போது உணவை யதிகமாய்க் கீழே சிந்திவிடுவதைப் பார்த்து இன்னும் கொஞ்சம் வைப்பார்கள். இவர்கள் இப்படிச் செய்வதும்தவிர, அதன் தாய் தன் குட்டியின் கேவலஸ்திதியை நோக்கித் தன் உணவிலிருந்து கொஞ்சம் அதற்குக் கொடுக்கும். மேலும், மற்றவைகளைப்போல் இந்த **விக்கு** என்னும் குட்டி குருவிகளையும் எலிகளையும் பிடிக்கச் சக்தியற்றிருப்பதைக் கண்டு தானே அவைகளைப் பிடித்துக் கொண்டுவந்து கொடுக்கும். இப்படிப் பலவிதங்களில் அதனிடத்தில் அபிமானமாயிருக்கும்.

இதெல்லாமன்றி அதற்கு என்னிடத்திலிருந்த பிரீதியைப் பாருங்கள். ஒருநாள் நான் கொடிய தலைநோயினால் அவஸ்தைப் பட்டுக்கொண்டு நாள் முழுவதும் ஆகாரமில்லாமல் படுத்திருக்கையில், சாயங்காலத்தில் சமையலறையினின்றும் ஒரு இறைச்சித் துண்டைக் கவ்விக்கொண்டு வந்து என்முன்

வைத்து அதை நான் தின்னவேண்டுமென்ற பாவனே காட்டிற்று. நான் டாட்டைத் திருப்தி செய்யும்பொருட்டு இறைச்சியில் கொஞ்சம் சாப்பிட்டு அதற்குமேல் சாப்பிட முடியாததுபோல் நடித்து மிகுந்ததை அதையே தின்னச்சொன்னேன். டாட்டும் உண்மையாகவே என்னுல் தின்ன முடியவில்லையென்று தனக்கு நிச்சயமாகும்வரையில் சும்மாயிருந்து பிறகு அதைத் தின்றுவிட்டது.

இப்படியெல்லாம் டாட் அதிக புத்திசாலியாயும் நற்குணங்களுடையதாயும் இருந்துவந்து கடைசிதடவை குட்டிபோட்டு அப்பொழுது அதன் கண்ணில் ஏதோ நோய் கண்டு சிலநாளுக்கெல்லாம் இறந்தது. கண்ணேயினுல் தான் கண்திறந்துபார்க்க முடியாமலிருந்தபோதிலும் அதன் குட்டிகளே யாராவது அருகில் கொண்டுவந்து வைத்தால் அவைகளேத் தடவிக்கொடுத்துக் கொஞ்சும். நான் அதனருகில் சென்றால் என்னேத் தொட்டமாத்திரத்தில் அதன் எஜமானியென்றறிந்து அதிக சந்தோஷப்படும்."

டாட் ஒரு பூனேயாயிருந்தபோதிலும் அதனிடத்தில் அன்பு என்னும் குணம் நிறைந்திருந்ததினுல் அதன் வாழ்நாள் மிகவும் சிறந்ததாகவேயிருந்தது. ஆகவே, மிருகங்களானுலும் சரி, மனிதரானுலும் சரி நாம் எல்லோரிடத்திலும் பாராட்டவேண்டியது அன்பே யாகும்.

ஆபிரிக்காதேசத்துக் குளவிகள்.

இவைகளேப்பற்றிப் பின்வருமாறு ஒரு துரைமகன் எழுதுகிருர்:—"ஒருநாள் என் படுக்கை அறையின் ஜன்னலின் ஓர் மூலேயில் ஒரு சிறிய சிற்பவேலேயைக் கவனித்தேன். மஞ்சளான தேகமும் ஊதாநிறமுள்ள இறகுகளும் உடைய ஒரு குளவி அங்கேவந்து அதிக ஊக்கத்துடனும் சுறுசுறுப்பாயும் களிமண்ணேக்கொண்டு ஏழு குழைகளேக் கட்டிற்று. வேலேசெய்தது ஆண்குளவி. அது என் தோட்டத்திற்கு வெளிப்புறத்திலிருந்த ஒரு உளேயினின்றும் களிமண்ணேச் சிறு குண்டுகளாகத் திரட்டிக் கொண்டுவந்து தன் வாயினுலும் கால்களினுலும் வேலேசெய்து குழைகளாகச் செய்தது. முதல் குழை செய்து முடிந்தவுடன் பெண்குளவி அதற்குள் சென்று அதன் நுனியில் முட்டையிட்டு வந்தது. பிறகு இரண்டும் பறந்து போய் ஒரு சிலந்திப்பூச்சியைக் குற்றுயிராயிருக்கும்படிக் கொட்டி, அதைக் கொண்டுவந்து அக்குழைக்குள் அடைத்தன. இப்படியே நாள்முழுவதும் சிலந்திகளே வேட்டையாடி, அவைகளேக்கொண்டுவந்துகுழைக்குள் அடைத்துக்கொண்டேயிருந்தன. அஸ்தமனமானவுடன் ஆண்குளவி கொஞ்சம் களிமண்ணே யெடுத்துவந்து அக்குழைக்குள் வேறு பூச்சி எதுவும் செல்லாமலிருக்கும்படி அதன் துவாரத்தை நன்றய் அடைத்துவிட்டுப் போயிற்று. மறுநாள் நான் அதிகாலேயில் எழுந்து, அந்த வண்டுகள் முன்போல் வேலேசெய்வதற்கு இடைஞ்சலில்லாமலிருக்கும்பொருட்டு ஜன்னலின் கதவுகளேத் திறந்ததும் அவை அங்கே வந்தன. முன்னுள் குழையின் வாயில் அடைத்துவைத்த மண் இன்னும் ஈரமாகவேயிருந்ததினுல் அதை வெகு சுலபமாக எடுத்துவிட்டுக் குழையைத் திறந்தன. அதன்பிறகு, அக்குழையின் நுனியிலிருக்கிற முட்டையிலிருந்து வெளிப்படப்போகிற சிறு வண்டின் ஆகாரத்தின்பொருட்டுப் பின்னும் சில சிலந்திகளேயெடுத்துவந்துசேர்த்தபிறகு, அக்குழையின் வாயைப் புதுமண் கொண்டுவந்து மூடிவிட்டன. இவ்வளவு வேலேசெய்தும் இளேப்பு என்பது சிறிதும் இல்லாமல் அப்பொழுதே அந்தக் குழையின் பக்கத்தில் மற்றெரு குழை கட்டத் தொடங்கின. இவ்வாறு சுமார் 15 நாள்வரையில் உழைத்து ஏழு குழைகளேக் கட்டி முடித்து அவைகளில் சிலந்திகளேயும் சேகரித்து விட்டன. அதன்மேல் அந்த ஏழு குழைகளும் ஒரே கட்டடமாக இருக்கும்படி அவைகளே ஒன்றுகச் சேர்த்து மெழுகிவிட்டுச் சென்றன. இதையெல்லாம் கவனித்துக்கொண்டிருந்த நான், குழைக்குள்ளிருந்த முட்டையினின்றும் வெளிப்பட்ட குஞ்சானது, சிலந்திகளேயெல்லாம் தின்றுவிட்டு வெளிப்படும் விதத்தைப் பார்க்க வேண்டுமென்ற ஆவலுடன் அந்தக் கட்டடத்தை அப்படியே ஜன்னலினின்றும் பெயர்த்தெடுத்து அதை யொரு கூடையிலிட்டு அக்கூடையின் வாயை வலேயினுல் மூடி வைத்தேன். ஒரு குழையை நிகள வாட்டத்தில் கிீறிப்பார்க்க அதில் 15 சிறிய

சிலந்திகள் அடைக்கப்பட்டிருந்தன. அவைகளில் ஒன்று குழையில் நுழைய முடியாத அளவு பெரியதாயிருந்ததினால் அதன் கால்களை வெட்டி யடைத்ததாகத் தோன்றிற்று. அந்த மண் கோட்டையைச் சுமார் இரண்டு மாதம் வரையில் அப்படியே வைத்திருந்து பிறகு ஒரு நாள் திறந்துபார்க்கையில் அதில் ஊதாநிறமாயும், பளிங்குபோல் தெளிவாயும் ஒரு கூடும், அக்கூட்டில் நன்றாய் வளர்ந்த ஒரு சிறு குளவியும் காணப்பட்டன. அப்புழுவின் நிறம் வெயி லில்லாத விடத்தில் இருந்த இலைகளைப்போல் வெள்ளையாயிருந்தது. அங்கே சேகரித்திருந்த சிலந்திகளில் ஒன்றேனும் காணப்படவில்லை. முட்டையிலிருந்து வெளிப்பட்ட குஞ்சானது அச்சிலந்திகளையெல்லாம் தின்று பெரிய குளவியாகிவிட்டது. ஆனால், அதைச் சுற்றியிருந்த அழகான கூடு உண்டான விதம் மாத்திரம் தெரியவில்லை. அக்கூடு கண்ணாடி போலிருந்ததினால் அதற்குள்ளிருந்த புழுவை நன்றாய்ப் பார்க்க முடிந்தது. அந்தப் புழு அந்தக் கூட்டின் ஒரு பக்கத்தில் வட்டமாக ஒரு சிறு துவாரம் செய்துகொண்டு அதன் வழியாய் மெதுவாக வெளியே வந்தது. கூடையின் வாயில் கட்டியிருந்த வலையை நான் அவிழ்த்தவுடன் அக்குளவி பறந்து ஓடிப்போயிற்று.

மற்றொருநாள் இதைக்காட்டிலும் கொஞ்சம் பெரியதான இன்னொரு ஜாதிக் குளவியொன்றைக் கண்டேன். அது ஒரு கொழுத்த கம்பளிப்பூச்சியைக் கொன்று அதைத் தன் உடலோடு அணைத்துப் பிடித்துக்கொண்டு போயிற்று. அது ஒரு மண்வளையண்டை சென்று தன் சுமையைக் கீழே இறக்கி வைத்துவிட்டு அந்த வளையைப் பெரியதாக்கத் தொடங்கிற்று. வளைக்கு வெளியிலிருந்து மண்ணைக் கீறிப் பிறகு வளையிலிறங்கி விழுந்த மண்ணை வெளியே கொண்டுபோயிற்று. இப்படிப் பலமுறை செய்து வளை சிறிது அகலமானவுடனே, தான் இறக்கி வைத்திருந்த கம்பளிப்பூச்சியை யிழுத்துச் சென்று வளையின் ஓரமாய்ச் சாய்த்து வைத்துவிட்டுத் தான் வளைக்குள்ளிறங்கிப் பூச்சியைப் பிடித்து இழுத்து வளைக்குள்ளே சேர்த்துவிட்டது. அக்குளவி அந்தக் கம்பளிப்பூச்சியின் தேகத்தில் முட்டையிட்டது என்பதற்குச் சந்தேகமே யில்லை. அந்த முட்டையிலிருந் துண்டாகிற குஞ்சுக்கு அந்தப் பூச்சிதான் ஆகாரமாயிருக்கும்."

சென்னையில் நாய்களின் சம்ஹாரம்.

சென்னையில் தெருக்களில் பகிரங்கமாய் நாய்களைத் தடிகளாலடித்துக் கொல்லுகிற கொடிய வழக்கத்தை முதல்முதல் வெளிப்படையாய்க் கண்டனம் செய்தவர், சென்னை ஜீவஹிம்ச நிவாரண சங்கத்தின் அக்கிராசனாதிபதியாயிருந்த காலஞ்சென்ற நீதியதிபரான பாடெம் துரையவர்கள். பெரும்பாலும் அவருடைய முயற்சியினாலேயே வளர்ப்பவர் இன்றித் திரிகிற நாய்களைக் கொடூரமில்லாமலும், துன்பமில்லாமலும் கொல்லும்பொருட்டு 'லிதால் சேம்பர்' என்னும் விஷக்காற்று அறை யொன்று சங்கத்தில் சேர்க்கப்பட்டது. இது வேப்பேரி ஹைரோட்டிலிருக்கிற நாய்களின் ஆசிரயத்தில் (Dog's Home) கட்டப்பட்டிருக்கிறது. வருஷந்தோறும் வீதிகளில் நாய்களை அடிக்கிற வழக்கத்தை நிறுத்திவிட்டு இவ்வருஷம் இந்த அறையை உபயோகிக்கிறார்கள். இதை யுபயோகிக்க ஆரம்பித்ததில், சென்ற எப்பிரல்மீ 1உ முதல் 3,400 நாய்களும், சுமார் 700 நாய்க்குட்டிகளும் கொண்டுவரப்பட்டனவாம். அதில் மே மாதத்தில்மாத்திரம் கொண்டுவரப்பட்டவை 1,417. ஆகஸ்டு மாதத்தின் இறுதி வரையில் கணக்கிட்டுப் பார்த்ததில் அது வரையில் கொண்டுவரப்பட்ட 4,129 நாய்களில் 3,650 கொல்லப்பட்டன வென்றும் 470 நாய்கள் அவைகளின் சொந்தக்காரர்களுக்கு வாப்சு செய்யப்பட்டன வென்றும் தெரிகிறது. தடியால் அடித்துக் கொல்லுகிற காலத்தில் வருஷத்தில் சுமார் 5,000 நாய்கள் கொல்லப்படுமாம். இவ்வருஷமும் அந்தத் தொகை ஆய்விடும். இந்தப் புதிய வழக்கத்தில் ஒரு முக்கியமான பிரயோஜன மிருக்கிறது. அதாவது வளர்க்கப்படும் நாய்களென்று தோன்றுவனவற்றை யுடனே கொல்லாமல் மூன்றுநாள் வரைக்கும் வைத்திருக்கிறார்கள். அதற்குள் சொந்தக்காரர் வந்து அதற்குள்ள சொற்ப கட்டணத்தைச் செலுத்தித் தம்முடைய நாய்களை

மீட்டுக்கொண்டுபோகலாம். இப்படிச் செய்வதினுல் பழைய வழக்கத்தின்பிரகாரம் இரக்கமற்ற நாயடிப்போரின் கையில் மாண்டிருக்கவேண்டிய 470 நாய்கள் உயிர் தப்பின.

இந்த 'விதால் சேம்பர்' ஜீவஹிம்சை நிவாரண சங்கத்துக்குச் சொந்தமானபோதிலும், இம்மாதிரி கொல்லும்பொழுது அதைப் பரிசோதிக்கும்பொருட்டு ஜந்து வைத்திய சாஸ்திரி யொருவரின் உதவி அவசியமா யிருப்பதினுல், வெடரினெரி காலேஜில் (Veterinary College) உள்ள மிஸ்டர் ஜே. எப். வாலடேர்ஸ் என்பவர், அதற்காக நியமிக்கப்பட்டிருக்கிருர். இவ்வாறு கொல்லப்பட்ட நாய்களில் 26 வெறி பிடித்தவை யென்பதைப் பார்க்கும்பொழுது, ஒரு தேர்ந்த ஜந்து வைத்தியர் சதா இருக்க வேண்டுமென்று தெரிகிறது.

இந்த விதால் சேம்பரில் நாய்கள் கொல்லப்படுகிற விதத்தைக் கவனிக்கும்பொழுது அது மிகவும் சுலபமானதா யிருக்கிறது. முதலில் கட்டப்பட்ட அறை பிரயோஜனமற்றதாகிவிட்டது. ஏனென்ருல், அதில் விடப்பட்ட விஷக்காற்று நாய்களை யுள்ளே விடுவதற்காகக் கதவைத் திறக்கும்பொழுது வெளியே போய்விடும். ஒருநாள் உள்ளே போடப்பட்ட ஒரு நாய் மறுபடி கதவைத் திறந்ததும் சாகாமல் எழுந்தோடத் தலைப்பட்டது. ஆனுல், இப்போதிருக்கிற அறை தரையின்கீழ்க் கட்டப்பட்டும், நன்ருய்ச் சிமிட்டி பூசப்பட்டும், நாய்களை உள்ளே இறக்குவதற்காக ஒரு சிறிய கதவும் அமைக்கப்பட்டிருக்கிறது. விஷக்காற்று அருகாமையில் சேகரித்து வைக்கப்பட்டு உள்ளே விடப்படுகிறது. சாதாரணமாய் இதில் போடப்பட்ட நாய்கள் $1\frac{1}{2}$ நிமிஷத்திற்குள் திக்குமுக்கல் கொண்டு மாண்டுபோகின்றன. இப்படி ஹிம்சை யில்லாமல் நாள் ஒன்றுக்கு நூற்றுக்கணக்கான நாய்களைக் கொல்லலாம். விதால் சேம்பர் உபயோகத்திற்குக் கொண்டுவரப்பட்ட முதல் வருஷத்திலேயே அதன் வேலை இவ்வளவு திருப்திகரமாய் நடந்தேறி வருவதில் ஜீவஹிம்ச நிவாரண சங்கத்தாருக்கு அதிக சந்தோஷம். பொது ஜனங்களும் எப்பொழுது பார்த்தாலும் புத்தியில்லாத நாய்க்கொல்லிகள் நாய்களைத் தடிகொண்டு முரட்டுத்தனமாய்க் கொல்லுகிற காட்சியைப் பார்க்கவேண்டிய தில்லாமலிருக்கிறது.

இச்சமயத்தில் 'விதால் சேம்பரின்' பல வித பிரயோஜனங்களைப் பற்றிச் சொல்லும்பொழுது, அது இப்போது கட்டப்பட்டிருக்கிற இடத்திற்குச் சுற்றுப் பக்கங்களில் வசிப்பவர்களுக்கு நூற்றுக்கணக்கான நாய்கள் குலைப்பது சகிக்கமுடியாத தொந்தரவாயிருக்கிற தென்பதையும் தெரிவிக்கவேண்டியிருக்கிறது.

அரபிக் குதிரை.

குதிரைகள் எல்லாவற்றிலும் மிகவும் சிறந்தவை அரபித்தேசத்துக் குதிரைகள். அவை பார்வைக்குக் கண்ணியமாயும், அழகான உருவமுடையனவாயும் இருக்கின்றன. குதிரைகளைப் பாதுகாத்துப் பழக்குந் திறமையில் அரபியருக்குச் சமானமாய் வேறு ஒருவரும் இல்லை. அவர்கள் தமது குதிரைகளை நடத்தும்பட்சத்தினுல் அவைகளுக்கு இயற்கையாயுள்ள மிருககுணம் மாறிச் சாந்தம், விசுவாசம், கீழ்ப்படிதல் முதலிய நற்குணங்கள் அமைகின்றன. நமது நாட்டார் குதிரைகளைக் கட்டிப்போட்டுத் தீனி வைக்கிருர்கள். அரபியரோ அப்படிச் செய்வதில்லை. அவர்கள் தங்கள் குதிரைகளை சுயேச்சையாய்த் திரிந்து மேய்ந்துவர விடுகிருர்கள். அக்குதிரைகளும் தம் எஜமானர் குரலோசையைக் கேட்டவுடனே ஆவலோடு விரைந்து ஓடிவரும். அரபிக் குதிரை பகலெல்லாம் மேய்ந்து இரவில் தன் எஜமானன் இருப்பிடத்திற்கு வந்து, அவன் பிள்ளைகளோடு தானும் ஒரு பிள்ளையைப்போல் படுத்து நித்திரை செய்யும். அக்காலத்தில் அங்குப் படுத்திருப்பவர்களுக்குச் சிறிதும் சங்கட முண்டாக்காது. மேலே ஏறிச் சவாரி செய்பவன் தவறிக் கீழே விழுந்துவிட்டால் அக்குதிரை தட்சணமே நின்று, விழுந்தவன் மறுபடியும் தன்மேல் ஏறும்வரையில் ஓடியும் அப்புறம் எடுத்து வைப்பதில்லை.

அரபியர்கள் தங்கள் குதிரைகளை மிகவும் பட்சமாய் வளர்க்கிருர்கள் என்பதை விளக்கும் ஒரு கதை உண்டு. அதாவது: மிகவும் வறியவனுன ஓர் அரபியன் ஒரு குதிரையை வளர்த்துவந்தான். அது கண்டோரெல்லாம்

விரும்பத்தகுந்த அழகுள்ளதா யிருந்தது. ஒருகாலத்தில் அவ்வூர் அரசன் அக்குதிரையைக் கண்டு அதன் பேரழகுக்காக அதை எவ்விதத்திலாயினும் கைப்பற்ற எண்ணங் கொண்டான். அரசன் உடனே அக்குதிரையின் எஜமானனாகிய அரபியனை அழைப்பித்து அக்குதிரையைத் தனக்கு விற்றுவிடும்படிக் கேட்டான். அரபியன் தன் குதிரையை, அரசன் விரும்பியபடி விற்றுத் தன் தரித்திரதசையை நீக்கிக்கொள்ள எண்ணங் கொண்டான். ஆயினும், அவன் அக்குதிரையைத் தன் புதல்வனைப்போல அருமையாய்ப் பாதுகாத்து வந்தபடியால், அதை விற்க மனந்துணியாமல் காலதாமதஞ்செய்து வந்தான். அதுகண்ட அரசன் எவ்விதமாயினும் அக்குதிரையை வாங்கியே தீரவேண்டும் என்னும் கருத்துடையவனாய் அவனுக்கு மிகுந்த திரவியம் கொடுப்பதாயும் வாக்களித்தான். அரபியன் தனக்குக் கிடைக்கும் பெருந்தொகையைக் கேட்டு மனமகிழ்ந்து சம்மதித்துத் தன் குதிரையை அரசன் சமுகத்திற்கு ஓட்டிக்கொண்டு வந்தான். அரசனும் குதிரைக்காகச் செலுத்தவேண்டிய தொகையை எண்ணி எதிரே வைத்தான். அரபியன் திரவியத்தையும் தன் குதிரையையும் திரும்பித் திரும்பிப் பார்த்து முடிவில் குதிரையை நோக்கிச் சொல்லுவானாயினன்.

"என் கண்ணே! இப்பணத்தின்பொருட்டல்லவா நான் உன்னை விற்கச் சம்மதித்தேன். ஐயோ! நான் உன்னை எவ்வாறு பிரிந்திருப்பேன்! நான் விற்றுவிட்டால் அவர்கள் உன்னை இறுகப் பிணித்து வருத்தி வேலை வாங்குவார்கள் அல்லவா? உன்னை வருத்துவதைவிட நான் வறுமையால் வருந்துவதே எனக்கு மேலானதாகத் தோன்றுகிறது. ஆதலால், நீ என்னோடு வந்து என்னையும் என் மக்களையும் மகிழச்செய்" என்று சொல்லிக்கொண்டே குதிரைமேல் பாய்ந்தேறினன். அது அவனைத் தாங்கிக்கொண்டு அதிவேகமாய் ஓடி அவன் இருப்பிடம் சேர்ந்தது. அரசன் அதைக் கண்டு அரபியன் தன் குதிரையினிடத்தில் வைத்திருந்த அன்பிற்காக வியந்து மிகுந்த திரவிய உபகாரஞ் செய்து அவனது தீரா வறுமையைக் களைந்தான்.

சமாசாரக் குறிப்புகள்.

1. **திருச்சினாப்பள்ளி ஜீ. ஹி. நி. உபசங்கம்.**—திருச்சினாப்பள்ளி டவுன்ஹாலில் அவ்வூரில் முக்கியமானவர்கள் ஓர் சபைகூடி ஜீவ ஹிம்ச நிவாரணத்தின்பொருட்டு ஒரு உபசங்கம் ஸ்தாபித்தார்கள். அப்பொழுது ஜில்லாக் கலெக்டராகிய மிஸ்டர் எம். யங்க் துரையவர்கள் சங்கத்தலைவராயும், ஜில்லா போலீஸ் சூபரின்டென்டெண்டாகிய மிஸ்டர் டப்ளியூ. இ. லான்ஸ்டேல் துரையவர்கள் கௌரவ காரியதரிசியாயும் நியமிக்கப்பட்டார்கள். தற்காலம் டவுன் நியூஸென்ஸ் ஆக்ட்டின் 5—வது செக்ஷனிலுள்ள நிபந்தனைகளுக்கு இணங்க உபசங்கம் வேலை செய்ய வேண்டுமென்றும், காரியதரிசிக்கும் ஏஜண்டுக்கும் போலீஸ் உத்தியோகஸ்தர்களுக்குள்ள அதிகாரத்தைக் கொடுப்பிக்கவும், மாஜிஸ்திரேட்டு தரப்பில் வசூலாகிற அபராதங்களைச் சங்கத்திற்குச் சேர்ப்பிக்கவும் கவர்ன்மெண்டாருக்கு விண்ணப்பஞ் செய்துகொள்ள வேண்டுமென்றும் தீர்மானிக்கப்பட்டது. மிஸ்டர் டால்ரிம்பில் ஹே துரையவர்களுக்கும், மிஸ்டர் டப்ளியூ. இ. லான்ஸ்டேல் துரையவர்களுக்கும் மற்றும் அவர்களைச் சேர்ந்தவர்களுக்கும் உபசங்கம் ஏற்படுத்த அவர்கள் எடுத்துக்கொண்ட பிரயாசைக்காகச் சென்னை சங்கத்தின் கமிட்டியார் அநேக வந்தன மளிக்கிறார்கள்.

---

2. **சென்னை ஜீ. ஹி. நி. சங்கம்.**—இச்சங்கத்திற்குக் கடந்த ஏப்பிரல் மாதத்தில் வரவு ரூ. 536-2-0—ம், செலவு ரூ. 770-5-1—ம் ஆயின. மிஸ்டர் இ. ஆர். ஆஸ்போரான் துரையவர்கள், இச்சங்கத்துக் குதவியாக விநோதசபை யொன்று கூட்டி, அதனால் ரூ. 300—ம், இராயபுரம் காட்டன் அண்டு ஸ்பின்னிங் மில்களுக்கு மானேஜரான மிஸ்டர் தாம்ஸே காஞ்சி ஆஷர் என்பவர் மில் புரொப்ரைடரின் அனுமதியின்பேரில் இனமாய் ரூ. 125—ம் அனுப்பினார்கள். அத்தொகைகள் சங்கத்தின் பண்டுக்குச் சேர்க்கப்பட்டன. கமிட்டியார் இதற்காக மேற்சொல்லப்பட்டவர்களுக்கு அநேக வந்தன மளிக்கிறார்கள். மிகவும் ஆவசியமாயிருந்த திருச்சினாப்பள்ளியில் இச்சங்கத்தின் கிளையொன்று ஏற்பட்டதற்குக் கமிட்

டியார் மிகவும் சந்தோஷிக்கிறார்கள். எழும்பூர் ஜூனியர் ப்ரெஸிடென்சி மாஜிஸ்திரேட்டு முன்பாக அதிகப் பளுவையேற்றிய குற்றத்திற்காகச் சில கேஸ்கள் விசாரணைக்கு வந்து அவை தள்ளிவிடப்பட்டன. கல்கத்தா பம்பாய் இராஜதானிகளில் போலீஸ் கமிஷனரால், ஒற்றைமாட்டு வண்டிகளிலும், இரட்டைமாட்டு வண்டிகளிலும் சுமையேற்ற அளவு ஏற்படுத்தப்பட்டிருப்பது போல், இவ்விடத்திலும் ஏற்படுத்தாமலிருப்பதினால் இப்படிப்பட்ட கேஸ்களை நடத்துவதி லிருக்கிற கஷ்டத்தை ஜனங்களுக்குக் கமிட்டியார் இதன் மூலமாய்த் தெரிவிக்கிறார்கள். இதைக்குறித்து கவர்ன்மெண்டாருக்கு விண்ணப்பஞ் செய்யப்பட்டிருக்கிறது.

---

3. **கார்லே கர்ஸ் சர்க்கஸ்.**—கார்லே கர்ஸ் சர்க்கஸ் புரொப்ரைடர்கள் சென்னை ஜீவ ஹிம்ச நிவாரண சங்கத்துக்குச் சகாயமாக கனம்பொருந்திய நீதியதிபராகிய மில்லர் துரையவர்களின் பரிபாலனத்தின்கீழ் ஒரு ஆட்டம் ஆடினார்கள். அன்றிரவு கூட்டமதிகமாயிருந்தும் ஐரோப்பியர் சொல்பமாய்த்தான் வந்தார்கள். சங்கத்தின் காரியதரிசியாகிய மிஸ்டர் ரென்காண்டர் துரையவர்கள் தம் மனைவியாருடன் வந்திருந்தார்கள். தொடக்கத்திலிருந்து முடிவுவரையிலும் ஆட்டம் வெகு விமரிசையாக விருந்தது. யானை தன் முதுகின்மேல் சிங்கத்தையேற்றிக்கொண்டு டிரைஸிகில் மேல் செல்வதும், குரங்கு, நாய், கரடி, கிளி இவைகளின் தந்திரமான விளையாட்டுகளும், கார்லே கர்ஸ் என்னும் அண்ணன் தம்பிகள் இருவரும் சைகிலின்மேல் செய்த திறமையான வேலைகளும், காட்டுமிருகங்களை ஆட்டின மிஸ்டர் லேன் என்பவரின் வல்லமையும், எல்லாம் அதியாச்சரியமா யிருந்தன. ஆட்டம் முடிவதற்குமுன், ஜீவ ஹிம்ச நிவாரண சங்கத்தின் கமிட்டி மெம்பர்களி லொருவரான ம-௱-௱-ஸ்ரீ. எம். எ. திருநாராயணாசாரியார் சர்க்கஸ் புரொப்ரைடர்களுக்கு அவர்களின் உதார குணத்திற்காக அநேக வந்தனமளித்து, அதற்குப் பதிலாக சங்கத்தின் பேரால் மிஸ்டர் லேன் என்பவருக்கு தங்கத்தினால் செய்த ஒரு கீர்த்தி முத்திரைப் பதக்கத்தைப் பரிசளித்தார். பிறகு சர்க்கஸ் மானேஜரான மிஸ்டர் கோவிந்தர் மிஸ்டர் ரென்காண்டர் துரையவர்களுக்கு மாலை போட்டார்.

---

4. **சிகந்தராபாத்தில் ஜந்துக்களுக்குச் செய்யும் ஹிம்சை.** — கொஞ்சநாளைக்குமுன் சிகந்தராபாத்தில் வண்ணார் கழுதைகளை மிகவும் ஹிம்சிக்கிறார்களென்று, ஒருநாள் திருமல்கிரி ரோட்டுக்கு மேற்கே போகும் சாலையில், ஒரு வண்ணான், புண்ணிலிருந்து இரத்தம் சொட்டிக்கொண்டிருந்த ஒரு கழுதையின்மேல், அதிக பாரத்தை யேற்றிச் செல்வதைக் கண்ட ஜீவகாருண்யமுள்ள ஒரு பெரிய மனிதர், அந்தப் பெருத்த சுமையை யிறக்கச்செய்தார். இதைப்பற்றி அவ்வூர்க் கண்டோன்மெண்டு அதிகாரிகள் சிரமம் எடுத்துக்கொண்டு, இப்படிப்பட்ட கொடிய காரியங்களை நிறுத்த வேண்டுமென்று 'மதராஸ்மெயில்' பத்திரிகையிலும் எழுதினார்கள்.

---

5. **சென்னைப் பஞ்சரபோல்.** — பஞ்சரபோல் கமிட்டியார் சென்ற செப்டெம்பர் மாதம் 7-ம் தேதி குண்ணூர் ஹைரோட்டிலிருக்கும் பஞ்சரபோல் கட்டடத்தில் ஒரு சபை கூடினார்கள். அப்பொழுது லெப்டினெண்ட் கர்னல் கன் துரையவர்கள் அக்கிராசனம் வகித்தார். அப்பொழுது வைக்கோல் சேகரித்து வைப்பதற்காக ஒரு அறையும், 50 அடி குறுக்களவுள்ள ஒரு வட்டமான ஓதுக்கிடமும், தொத்துவியாதிகளால் அவஸ்தைப்படுகிறஜந்துக்களுக்கென்று பிரத்தியேகமாய் ஒரு கொட்டகையும் கட்டும் பொருட்டு, 2,000 ரூபாய் வரையில் செலவு செய்யத் தீர்மானிக்கப்பட்டது. மேலும், அங்கே ஏதாவது தொத்துவியாதி கண்டால் உடனே வெடரினெரி காலேஜ் அதிகாரிகளுக்குத் தெரிவிக்கும்படி, அங்கிருக்கும் சூபரின்டென்டெண்டுக்குக் கட்டளையிடப்பட்டது. இந்த ஆசிரயத்திலிருக்கும் ஜந்துக்களின் சம்ரக்ஷணைக்காகச் சில நாளுக்குமுன் மேன்மை தங்கிய பிட்டாபுரத்து இராஜா அவர்கள் ரூபாய் 150 நன்கொடை யளித்தார்.

Printed at the S. P. C. K. Press, Vepery, Madras—1909.



THE HON'BLE SIR C. ARNOLD WHITE, KT. CHIEF JUSTICE,
President, S. P. C. A.